# <u>குளித்தலை நகராட்சி</u>

06.03.2019.ஆம் தேதி புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள்–2019, அரசாணை நிலை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(எம்ஏ1), நாள்–04.02.2019.ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதனை தமிழ்நாடு அரசிதழில், அரசிதழ் எண்.43, நாள்–04.02.2019.ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள்–2019.ஐ, மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.238/2018/பி2)

பொருள்– 02. குளித்தலை நகராட்சியில் வழங்கப்படும் கட்டிட உரிமங்களுக்கு உரிமக்கட்டணம் இயந்திரங்கள் நிர்மானிப்பதற்கும், மனைப்பிரிவு செய்வதற்கும் மற்றும் இதர இனங்களுக்கும் உரிமையாணக் கட்டணம் 2016.ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்டு உரிமக்கட்டணங்கள் மூன்று ஆண்டுகளாக வசூலிக்கப்பட்டு வருகிறது. தற்போது, தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019.ன்படி விதி 14.ல் திட்ட அனுமதி அல்லது கட்டிட அனுமதி 5 ஆண்டுகள் மற்றும் ஒருமுறை காலநீட்டிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, முதலில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோரிய விண்ணப்பதாரர்களுக்கு கட்டிட அனுமதி கட்டணம் மற்றும் திட்ட அனுமதி கட்டணம் ஆகியவற்றினை ஏற்கனவே வசூலிக்கும் தொகையிலிருந்து கூடுதலாக 25 சதவீதம் வசூலிக்கலாம். மேலும் ஒருமுறை காலநீட்டிப்பு 3 ஆண்டுகள் வழங்க விண்ணப்பிக்கும் நபர்களுக்கு நடப்பில் முதலில் செலுத்திய கட்டண விகிதம் முழுவதும் செலுத்தப்பட வேண்டும். எனவே, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.31159/2018/டிபி3, நாள்–05.03.2019.ன்படி, திருத்திய கீழ்க்குறிப்பிட்ட கட்டணங்களுக்கு அனுமதி வழங்கலாம். மன்ற அனுமதி பெற்று மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்து 01.04.2019 முதல் கட்டணம் வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | நகராட்சி சட்டப் பிரிவு | விபரம் | அளவு | காலம் | பழைய கட்டணம் | புதிய கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | 175 | நிலத்தை வீட்டு மனைகளாகவும், தெருக்களாகவும் பிரித்து அனுமதி அளிக்க | ஒரு ஏக்கர் ஒன்றுக்கு | – | 10000 | 12500 |
| 2. | 175 | மனை உட்பிரிவு அங்கீகாரம் செய்ய | ஒரு மனை | – | 1250 | 1500 |
| 3. | 182 | குடியிருப்பு வீடுகள் மற்றும் கடைகள் முன்பாக கோடைக்கால பந்தல் | 10.ச.மீ. அதன் பாகத்திற்கும் | 3–மாதம் (மே, ஜுன், ஜுலை) | 400 | 500 |
| 4. | 182 | நகராட்சி தெருக்களில் வீடு கட்டுவதற்கு வேண்டிய கல், மண், மணல், செங்கல், ஜல்லிகற்கல் ஆகியவற்றை போக்குவரத்திற்கு இடையூறு இல்லாத வகையில் வைக்க | 1.ச.மீ. அதன் பாகத்திற்கும் (மனையின் அகலம் மீட்டரில் x 1.20 மீ.) | ஐந்து வருடங்கள் | 100 | 125 |
| 5. | 197, 198, 199, 200, 207,208, 215, 217. | கட்டிட அனுமதி வழங்கல், மனை ஒப்புதல் (Site Approval) | 40’x60’ = 2400 ச.அடி வரை | ஐந்து வருடங்கள் | 600 | 750 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6. | “ “ | தார்சு, தார்சும்–ஓடும், ஏ.சி.சீட் கலந்த கட்டிடங்கள் குடியிருப்பு மட்டும் (எல்லா தளங்களுக்கும்) | 10.ச.மீ. / அதன் பாகம் | ஐந்து வருடங்கள் | 500 | 625 |
| 7. | “ “ | தார்சு, தார்சும்–ஓடும், ஏ.சி.சீட் கலந்த கட்டிடங்கள் குடியிருப்பு அல்லாதவை (எல்லா தளங்களுக்கும்) | 10. ச.மீ./ அதன் பாகம் | ஐந்து வருடங்கள் | 1000 | 1250 |
| 8. | “ “ | கல்விக் கூடங்கள் மாணவ விடுதிகள் கட்ட (அனைத்து தளங்களுக்கும்) | 10.ச.மீ./ அதன் பாகத்திற்கு | ஐந்து வருடங்கள் | 250 | 350 |
| 9. | “ “ | சுற்றுச்சுவர் | – | ஐந்து வருடங்கள் | 500 | 650 |
| 10. | “ “ | பதிவு கட்டணம் ஒரு விண்ணபத்திற்கு | – | ஒருமுறை | 100 | 500 |
| 11. | TNCD & BR 2019, Rule 7(2) | திட்ட அனுமதிக்கான கூர்ந்தாய்வு கட்டணம் அனைத்து தளங்களுக்கும் | 1 ச.மீ. | ஐந்து வருடங்கள் | 0 | 2.00 |
| 12. | “ “ | கட்டிட மராமத்து வேலைகள் (கட்டிடத்தில் எவ்வித மாறுதலின்றி) | – | – | 500 | 1000 |
| 13. | “ “ | பழைய கட்டிட மண் மற்றும் எல்லா இடங்களில் ஏற்படும் இடிபாடு மண் அப்புறப்படுத்த | 10.ச.மீ. அதன் பாகம் (பழைய கட்டிடம் பரப்பு) | ஒருமுறை | 550 | 600 |
| 14. | “ “ | மலக்கூடம்(WC) | ஒன்று | ஐந்து வருடங்கள் | 250 | 300 |
| 15. | “ “ | குளியல் அறை(Bath) | ஒன்று | ஐந்து வருடங்கள் | 250 | 300 |
| 16. | “ “ | செப்டிக் டேங் | ஒன்று | ஐந்து வருடங்கள் | 500 | 650 |
| 17. | 204 | கட்டிட அனுமதி காலத்திற்குள் கட்டிட அனுமதி புதுப்பித்துக்கொள்ள | அனுமதி காலம் முடிவதற்கு 30 நாட்களுக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும் | மூன்று வருடங்கள் | அசல் கட்டணத் தொகை | அசல் கட்டணத் தொகை |
| 18. | 199, 317(a), 216/ 1 & 2 | அனுமதியில்லா கட்டுமானத்திற்கு | கட்டிடத்தின் பரப்பளவில் 10 ச.மீ. அதன் பாகத்திற்கு | – | கட்டிட உரிமத் தொகை வசூலிக்கப் படும் | கட்டிட உரிமத் தொகை வசூலிக்கப் படும் |
| 19. | 207 | அனுமதி வழங்கப்பட்ட கட்டிட வரைபடத்தின் நகல் சரிபார்த்து வழங்க | ஒரு நகல் | – | – | 400 |
| 20. | 197, 198, 199, 200, 207,208, 215, 217. | சர்க்கஸ், சினிமா, நாடகம் மற்றும் கேளிக்கைகள், தனியார் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தற்காலிகமாக நடத்த | – | 15 நாட்கள் | 2000 | 3000 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21. | " " | மனைப்பிரிவு வரைபட நகல் | ஒன்றுக்கு | – | 750 | 1000 |
| 22. | " " | டவுன் மேப் சிறியது | ஒன்றுக்கு | – | 250 | 300 |
| 23. | " " | நில அளவு வரைபடத்தின் உண்மை நகல் ஒரு நகரளவை எண்ணுக்கு | – | – | 300 | 350 |
| 24. | " " | முழுமைத் திட்டம் வரைபடம் நகல் (Master Plan) வழங்க | ஒரு நகல் | – | 2500 | 2750 |
| 25. | " " | முழுமைத் திட்டம் பட்டியல் (Master Plan Schedule) | ஒரு நகல் | – | 1000 | 1250 |
| 26. | 3A, 3B, 7A, 7B, 16A, 16B | அனுமதி வழங்கப்படும் கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்துதல் கட்டிட பரப்பு, வைப்புத் தொகை. | 100 ச.மீ. வரை | – | 2000 | 2500 |
| | | | 101 ச.மீ. முதல் 200 ச.மீ. வரை | – | 3000 | 3500 |
| | | | 201 ச.மீ. முதல் 300 ச.மீ. வரை | – | 4000 | 4500 |
| | | | 301 ச.மீ. முதல் 400 ச.மீ. வரை | – | 5000 | 5500 |
| | | | 401 ச.மீ. முதல் 500 ச.மீ. வரை | – | 7000 | 7500 |
| | | | 500 சதுர மீட்டருக்குமேல் | – | 10000 | 10500 |
| 27. | 250 | **குடியிருப்பு அல்லாத மற்ற உபயோகங்களில் இயந்திரம் நிறுவ.** | | | | |
| (1) | | 1–குதிரை திறன் வேகத்திற்கு | ஒரு இயந்திரம் | ஒருமுறை மட்டும் | 250 | 300 |
| (2) | | 1–குதிரைதிறனுக்கு மேல் 5–குதிரை திறன் வரை | ஒரு இயந்திரம் | ஒருமுறை மட்டும் | 500 | 600 |
| (3) | | 5–குதிரைதிறனுக்கு மேல் 10–குதிரை திறன் வரை | ஒரு இயந்திரம் | ஒருமுறை மட்டும் | 1000 | 1250 |
| (4) | | 11–குதிரை திறன் முதல் 20–குதிரை திறன் வரை | ஒரு இயந்திரம் | ஒருமுறை மட்டும் | 2000 | 2250 |
| (5) | | 21–குதிரை திறன் மற்றும் அதற்குமேல் | ஒரு இயந்திரம் | ஒருமுறை மட்டும் | 4000 | 4500 |
| (6) | | காபி, மாவு அரைக்கும் இயந்திரம், குடிசைத் தொழில் இயந்திரம் | ஒரு இயந்திரம் | ஒருமுறை மட்டும் | 1000 | 1250 |
| (7) | | கடலை எண்ணெய், நெல் அரைத்தல், மரம் அறுத்தல் இயந்திரம் | ஒரு இயந்திரம் | ஒருமுறை மட்டும் | 2000 | 2250 |
| (8) | | பவர் லூம் இயந்திரம் | ஒரு இயந்திரம் | ஒருமுறை மட்டும் | 5000 | 5250 |
| 28. | | நகராட்சியில் படவரைவாளராக நியமிக்க பதிவுக் கட்டணம் | ஒரு நபர் | ஒருமுறை மட்டும் | 0 | 5000 |
| 29. | | நகராட்சியில் படவரைவாளராக நியமிக்க வைப்புத்தொகை | ஒரு நபர் | ஒரு ஆண்டு | 5000 | 5000 |
| 30. | | உரிமம் புதுப்பிக்க | ஒரு நபர் | மூன்று வருடங்கள் | 1000 | 1250 |

அலுவலக குறிப்பு– தற்போது கட்டிடம் கட்டுவதற்கு அனுமதிக்காலம் மூன்று ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக மேற்படி விதிகளின்படி உயர்த்தி உள்ளதால், திருத்திய கட்டண விகிதம் முழுவதும் 01.04.2019 முதல் வசூலிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.238/2019/பி2)

பொருள்– 03.

1.Resolved that Kulithalai Municipality is authorizing the authorized signatory to borrow the interest free loan of Rs. 162.93 Crore TUFIDCO for Provision of Internal Plumbing for HSC (Minimum 5500 Nos) for making optimum utilization Water Supply Scheme at Kulithalai Municipality under revolving fund of UIDSSMT as per the terms and conditions prescribed by TUFIDCO

2. The authorized signatory be and hereby authorized to execute the loan agreement and other documents if any with TUFIDCO and complete all the other formalities including affixing of the common seal of Kulithalai Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of Kulithalai Municipality.

3.Resolved to repay the interest free loan as per the repayment schedule in the agreement.

4. Resolved to adhere to time line as envisaged DPR.

5. Resolved that Kulithalai Municipality is authorizing the authorized signatory to make necessary budgetary provisions in Kulithalai Municipality's annual budget for the repayment of principal for the project proposals to TUFIDCO and is hereby confirmed that all dues will be time without default for creating sustainable revolving fund

6. Resolved that Kulithalai Municipality is authorizing the authorized signatory to open and operate an ESCROW account for WATER SUPPLY SCHEME in favour of TUFIDCO till the repayment of Loan.

மேற்காணும் TUFIDCO நிறுவன ஒப்பந்த நிபந்தனைகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2884/2017/இ1)

பொருள்– 04.

குளித்தலை நகராட்சிக்கு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2018–2019, பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டதில், மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.அ3/3346/2018, நாள்–19.02.2019.ன்படி, கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள வழங்கப்பட்ட நிர்வாக அனுமதி மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1) | குளித்தலை நகராட்சி கடம்பர்கோவில் வடபுறசாலை மற்றும் கரூர்–திருச்சி பைபாஸ் சந்திப்பில் (9–மீட்டர் உயரம்) உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல். | 5.00 |
| 2) | குளித்தலை நகராட்சி லைப்ரரி சாலையில் (9–மீட்டர் உயரம்) உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல் | 5.00 |

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.103/2019/இ1)

பொருள்– 05.

குளித்தலை நகராட்சிப் பகுதியில் DAY NULM திட்டத்தின்கீழ் அரசு மருத்துவமனை வளாகத்தில் சிறப்பு தங்குமிடம் புதியதாக கட்டும் பணி ரூ.65.00 லட்சம் திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.38038/2013/யுபிஏ2, நாள்–03.12.2018.ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1804/2017/இ1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தேவையான மின் உபகரணங்கள் 2019–2020.ம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் முதல் கட்டமாக பாதியளவு மின் உபகரணங்கள் வாங்க ரூ.4.75 லட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.361/2019/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சியில் நாப்பாளையம் மற்றும் பெரியார்நகர் தலைமை நீரேற்று நிலையங்களில் 20.எச்.பி. மற்றும் 33.எச்.பி. மின்மோட்டார் முறையே பொருத்தப்பட்டு குடிநீர் நீரேற்றும் பணி மேற்கொள்ளப்படுகிறது. மேற்படி மின்மோட்டார்களை பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், உடனுக்குடன் மின் உபகரணங்கள் மாற்றி வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.2.50 லட்சம் மதிப்பீட்டிலான செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.328/2019/இ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சிப் பகுதியில் அரசு உதவி திட்டம் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளோர்ருக்கு ரூ.2000/– வழங்கும் கணக்கெடுப்பு விண்ணப்பங்களின் விபரங்களை அவசர அவசியம் கருதி கணினி பதிவேற்றம் செய்யவேண்டி உள்ளது. அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,17,550/– மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.273/2019/இ1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சியில் பெரியார்நகர் மற்றும் நாப்பாளையம் தலைமை நீரேற்று நிலையங்களில் மின்மோட்டார்கள் பொருத்தி 250mm பம்பிங் மெயின் AC பைப் 2.50.Km அமைத்து குடிநீர் விநியோக நிலைய மெயின் லையன் 160 மீட்டர் 140 மீட்டர் குடிநீர் விநியோக லையன் 110mm. 90mm. 75mm (ம) 60mm 36 கி.மீ. நீளத்திற்கு அமைத்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி லையனில் 250mm சுலிஸ்வால்வ் 80mm (Sluice Valve) மற்றும் கேட்வால்வுகள் பொருத்தப்பட்டு உள்ளது. மேற்படி குடிநீர் விநியோக உதிரிபாகங்களில் ஏற்படும் பழுதுகளை வருடாந்திர பராமரிப்பு செய்ய ரூ.4.75 லட்சம் மதிப்பீட்டில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.329/2019/இ1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சி பகுதியில் பெரம்பலூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2018–2019.ல் லைப்ரரி சாலையில் (9–மீட்டர் உயரம்) உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல் பணிக்கு ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்அவர்களின் முன்அனுமதி 19.02.2019.ல் பெற்று 06.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | லைப்ரரி சாலையில் (9–மீட்டர் உயரம்) உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல். | M/s.ஸ்ரீராம் இன்ஜினியரிங், 13/1,அம்மன்நகர், கோயமுத்தூர். | 0.06 % குறைவு. |
| | | M/s.பாலகுரு இன்ஜினியரிங், 19AAநகர், சுந்தராபுரம், கோயம்முத்தூர். | 0.29 % அதிகம். |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.06 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.ஸ்ரீராம் இன்ஜினியரிங், கோயமுத்தூர் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.103/2019/இ1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சி பகுதியில் பெரம்பலூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2018–2019.ல் கடம்பர்கோவில் வடபுற சாலை மற்றும் கரூர்–திருச்சி பைபாஸ் சந்திப்பில் (9–மீட்டர் உயரம்) உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல் பணிக்கு ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்அவர்களின் முன்அனுமதி 19.02.2019.ல் பெற்று 06.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | கடம்பர்கோவில் வடபுற சாலை மற்றும் கரூர்–திருச்சி பைபாஸ் சந்திப்பில் (9–மீட்டர் உயரம்) உயர்கோபுர மின்விளக்கு அமைத்தல். | M/s.ஸ்ரீராம் இன்ஜினியரிங், 13/1,அம்மன்நகர், கோயமுத்தூர். | 0.06 % குறைவு. |
| | | M/s.பாலகுரு இன்ஜினியரிங், 19AAநகர்,சுந்தராபுரம், கோயமுத்தூர். | 0.29 % அதிகம். |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு 0.06 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s.ஸ்ரீராம் இன்ஜினியரிங், கோயமுத்தூர் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2). அவசர அவசியம் கருதி ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.103/2019/இ1)

பொருள்– 12. குளித்தலை நகராட்சி பகுதிகளில் 19 மினிபவர்பம்ப் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொதுக்கழிப்பிடங்கள் 23.ல் ஆழ்குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்யப்பட்டு உள்ளது. மேற்படி மினிபவர் பம்ப்களில் ஏறபடும் பழுது சரிசெய்யவும் ஆழ்குழாய் கிணறுகளில் நீரூற்று குறைவுற்றதில் புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைத்து பணி மேற்கொள்ளவும், பராமரிப்பு பணிகளுக்கும் ரூ.4.90 லட்சம் மதிப்பீட்டில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.330/2019/இ1)

பொருள்– 13. குளித்தலை நகராட்சியில் புதிய குடிநீர் இணைப்புகளுக்கு சாலை துண்டிப்பு கட்டணம் அரசு விதிகளின்படி நிர்ணயம் செய்யவேண்டி உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.748/2008/குவ2, நாள்–21.09.2009.ன்படி கீழ்க்கண்ட விபரப்படி,

| நகராட்சி கட்டணம் செலுத்தும் சாலை அளவு | கருங்கல் ஜல்லி சாலை | தார் சாலை | சிமெண்ட் சாலை |
|---|---|---|---|
| 0–30 | 1050 | 2250 | 2600 |
| 30–90 | 1650 | 2850 | 3200 |

மேற்படி சுற்றறிக்கையின்படி ஒவ்வொரு ஆண்டிற்கும் 5% உயர்த்தவேண்டி உள்ளது. அதன்படி 2019–2020.ல் சாலை துண்டிப்பு கட்டணம் பின்வருமாறு.

| சாலையின் நீளம் | தார் சாலை | சிமெண்ட் சாலை |
|---|---|---|
| 0–30 | ரூ.3666/– | ரூ.4234/– |

என்கிற விகிதத்தில் மாற்றம் செய்து வசூலிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1153/2018/இ1)

பொருள்– 14. குளித்தலை நகராட்சியின் வருவாய் மூலதனநிதி, குடிநீர் வடிகால்நிதி மற்றும் ஆரம்ப கல்விநிதி ஆகியவற்றின் 2019–2020.ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.308/2017/பி1)

பொருள்– 15. குளித்தலை நகராட்சி சத்தியமங்கலம் உரக்கிடங்கு பகுதியிலான 51711 மீட்டர் பரப்பளவு உள்ள குப்பைகளை பயோமைனிங் முறையில் அப்புறப்படுத்தும் பணி டோர்ன் கேமரா மற்றும் ஸ்டில் கேமரா மூலம் புகைப்படங்கள் மற்றும் வீடியோ ஆவணப்படுத்துதல் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.30,000/–க்கு மன்ற தீர்மானம் எண்.238, நாள்–30.11.2013.ல் அனுமதி பெறப்பட்டது. குறைந்த விலைப்புள்ளி வழங்கிய சேப் டெக், 3/3,கடம்பர்கோவில், குளித்தலை நிறுவனத்தின் ரூ.30,900/– தொகை மன்றத் தீர்மானம் எண்.7, நாள்–31.01.2019.ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே, கூடுதல் செலவினம் ரூ.900/–ஐ, சேப் டெக் நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.3657/2018/இ1)

பொருள்– 16. குளித்தலை நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–2019 திடக்கழிவு மேலாண்மை பணிகள் ஜெய்மகால் அவென்யூ பகுதியில் நுண்உரகுடில் அமைத்தல் மேற்கொள்ள அரசு நிறுவனம் ஆகிய தேசிய தொழில்நுட்ப கல்லூரி, திருச்சி–15.ல் Structural Design and Drawing of MCC பணிக்கு ரூ.1,18,000/– The Director, NIT, Trichy-620015 பெயரில் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1389/2018/இ1)

பொருள்– 17. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக டெங்கு தடுப்பு பணிக்காக கொசு புழுக்களை ஒழிப்பதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரவிலை பட்டியலின்படி தினக்கூலி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பணியாளர்களுக்கு 2018–2019 வருட ஊதிய உயர்வு அடிப்படையில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு எண்.இ1/544/2018, Dt:–21.06.2018.ன்படி தினக்கூலி தொகை ரூ.307/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). டெங்கு தடுப்பு பணியாளர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் மாத ஊதியம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரவிலைப்பட்டியல்படி தினக்கூலி வழங்க, இந்நகராட்சி பொதுநிதி அல்லது திட்ட நிதியிலிருந்து செலவினம் மேறகொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1326/2017/எச்1)

பொருள்– 18. குளித்தலை நகராட்சியில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளோர் கணக்கெடுப்பு பணிக்கு தேவையான படிவங்கள் வழங்க 18.02.2019.ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | விலைப்புள்ளி வழங்கி நிறுவனங்கள் / தொகை | | |
|---|---|---|---|---|
| | | 1) நவீன் ஆப்செட் பிரிண்டார்ஸ், குளித்தலை. | 2) ஆனந்தா ஆப்செட் பிரிண்டார்ஸ், குளித்தலை. | 3) சந்தா ஆப்செட் பிரிண்டார்ஸ், குளித்தலை. |
| 1) | சிறப்பு நிதியுதவி ரூ.2000 வழங்கும் திட்ட விண்ணப்ப படிவம் 5000 எண்ணம் வழங்குதல் | ரூ.25000/– | ரூ.27000/– | ரூ.27500/– |
| 2) | ஒப்புகை சீட்டு 25 புத்தகங்கள் அச்சிட்டு வழங்குதல் | ரூ.12500/– | ரூ.13000/– | ரூ.13500/– |
| | மொத்தம் | ரூ.37500/– | ரூ.40000/– | ரூ.41000/– |

அலுவலக குறிப்பு–
1). வரிசை எண்.1.ல் ஆன நவீன் ஆப்செட் பிரிண்டார்ஸ், குளித்தலை நிறுவனத்தாரின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2). ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.273/2019/இ1)

..8..

பொருள்– 19. இந்நகராட்சி பகுதியில் தமிழக அரசின் அரசாணையின்படி நாள்–01.01.2019 முதல் பிளாஸ்டிக் பொருள்கள் பயன்படுத்தவோ, விற்பனை செய்யவோ மற்றும் உற்பத்தி செய்யவோ தடை செய்யப்பட்டுள்ளது. எனவே, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி ROC.No.44555/2013/P3, நாள்–28.02.2019.ன்படி கீழ்கண்டவாறு அபராத தொகை விதிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு பிரிவு 2016(ன்)இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்.

| வ. எண். | குற்றங்கள் | முதல்முறையான குற்றத்திற்கான பணத் தண்டம் | இரண்டாம்முறை குற்றத்திற்கான பணத் தண்டம் | மூன்றாம்முறை குற்றத்திற்கான பணத் தண்டம் |
|---|---|---|---|---|
| 1) | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல் வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.25000/– | ரூ.50000/– | ரூ.1,00,000/– |
| 2) | வணிக வளாகங்கள் துணி கடை மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.10000/– | ரூ.15000/– | ரூ.25000/– |
| 3) | மளிகைக் கடைகள் மற்றும் மருந்து கடைகள் போனற் நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.1000/– | ரூ.2000/– | ரூ.5000/– |
| 4) | சிறிய வணிக விற்பனையாளர்களால் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.100/– | ரூ.200/– | ரூ.500/– |

மேற்கண்டவாறு தெரிவித்துள்ள விகிதத்தின்படி கட்டணம் அபராதம் விதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.436/2019/எச்1)

பொருள்– 20. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 52 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள நாள்–24.12.2018.ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்–28.12.2018.ல் வெளியிடப்பட்டதன் பட்டியல் நாள்–22.01.2019 அக்கார்ட் விளம்பர நிறுவனத்திற்கு ரூ.57383/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.855/2018/எச்1)

பொருள்– 21. குளித்தலை நகராட்சியால் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளான நாப்பாளையம் மற்றும் பெரியார்நகர் ஆகியவற்றின் குடிநீரை இரண்டு மாதிரிகள் எடுத்து பிரதிமாதம் குடிநீர் தர பரிசோதனை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும், தேவைப்படும் நேரங்களில் Iron Content சிறப்பு ஆய்வு செய்யவும் ஓராண்டுக்கு ரூ.40,000/– உத்தேச செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.717/2014/இ1)

பொருள்– 22. குளித்தலை நகராட்சி குடிநீர் பிரிவு வாகனங்கள் ஈப்பு TN-47-X-3173 மற்றும் குடிநீர் லாரி TN-47-E-0264 ஆகியவற்றின் 2019–2020ம் நிதியாண்டில் ஓராண்டிற்கு வாகனங்களின் அவசர எதிர்பாராத பழுதுகள் நீக்கம், பராமரிப்பு செய்தல், ஆயுள் காப்பிடு புதுப்பித்தல் ஆகியவற்றிற்கு ரூ.3.00 லட்சம் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதி வழங்கலாம்.
2). செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.460/2019/இ1)

பொருள்– 23. **2019.ஆம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12.ன்கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்**

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 (சட்ட எண்.29/1986).ல், பிரிவு 3, 6 மற்றும் 25 ஆகியவைகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306.ன்படி, 2019.ஆம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12.ன்கீழ் பிளாஸ்டிக் மொத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனை, எடுத்துச் செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன தடை செய்யப்பட்டு அபராத தொகை விதிக்கப்பட்டுள்ளதை கீழ்க்கண்டவாறு உப விதிகள் ஏற்படுத்தலாம்.

1) (i) **<u>செயலாக்க அதிகாரி:–</u>** நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையர் ஆவார்.

(ii) **<u>ஆய்வு நடத்தும் அதிகாரி:–</u>** ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணி மேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வர், நகர் நல அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.

(iii) **<u>மேல்முறையீட்டு அலுவலர்:–</u>** இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார்.

(iv) **<u>தண்டனைகள் விதிக்கும் முறைகள்:–</u>** மேற்படி சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு உடனடி ஸ்தல அபராதம், குடிநீர் இணைப்பு துண்டித்தல், பொருள்களை பறிமுதல் செய்தல், அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் ரத்து செய்தல் (D&O) முதலியன தண்டனை முறைகள்.

(v) வர்த்தக நிறுவனங்களின் வகைபாடு:–

1). மொத்த சேமிப்பாளர் / விநியோகிப்பாளர்–
- a) 1 சதுரடி முதல் 500 சதுரடி வரை பரப்பளவு கொண்ட கட்டிடம்
- b) 501 சதுரடி முதல் 1000 சதுரடி வரை பரப்பளவு கொண்ட கட்டிடம்
- c) 1001 சதுரடி முதல் 1500 சதுரடி வரை பரப்பளவு கொண்ட கட்டிடம்
- d) 1501 சதுரடி முதல் 2000 சதுரடி வரை பரப்பளவு கொண்ட கட்டிடம்
- e) 2001 சதுரடியும் அதற்கு மேலும்

2) வணிக வளாகங்கள்:–
- a) பெரிய மற்றும் சிறிய துணிக்கடைகள்,
- b) பல்பொருள் அங்காடிகள் பெரியது,
- c) திரையரங்குகள்,
- d) அரசு மதுபானக்கடை, மதுபான விற்பனைக்கூடங்கள்(BARS) மனமகிழ் மன்றம் முதலான இதர இனங்கள்,
- e) கல்வி நிறுவன வளாகங்கள்,
- f) அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வளாகங்கள்,
- g) திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள் முதலானவை,
- h) பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகள்,

3) மளிகைக் கடைகள், காய்கறிக்கடைகள், பழக்கடைகள், மருந்துக்கடைகள், பழச்சாறு விற்பனைக்கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்,

4) சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோர கடைக்காரர்கள் மற்றும் இதர வணிகம் செய்பவர்கள்.

2) இந்த துணை விதியை மீறனால் செலுத்தும் அபராதம், இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும், அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கு பிறகு இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவர்.

3) துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசுப்படுத்துபவர் அட்டவணை II.ல் குறிப்பிட்டுள்ளபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டடம் 1939.ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

4) மேல்முறையீட்டுக்கு உரிமை–
குளித்தலை நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையருக்கு மேல்முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்த துணை விதிகள், குளித்தலை நகர்மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளார்கள்.

..10..

**தண்டனைகள் விபரம்–**

**பிரிவு 306 (28–A).ன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்.**

| வ. எண். | குற்றங்கள் | முதல் முறையான குற்றத்திற்கான பணத் தண்டம் | இரண்டாம் முறை குற்றத்திற்கான பணத் தண்டம் | மூன்றாம் குற்றத்திற்கான பணத் தண்டம் |
|---|---|---|---|---|
| 1) | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல் வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | இருபத்து ஐந்தாயிரம் ரூபாய் | ஐம்பதாயிரம் ரூபாய் | ஒரு லட்சம் ரூபாய் |
| 2) | வணிக வளாகங்கள் துணி கடை மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | பத்தாயிரம் ரூபாய் | பதினைந்து ஆயிரம் ரூபாய் | இருபத்து ஐந்தாயிரம் ரூபாய் |
| 3) | மளிகைக் கடைகள் மற்றும் மருந்து கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன் படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் | ஐந்தாயிரம் ரூபாய் |
| 4) | சிறிய வணிக விற்பனையாளர்களால் பயன் படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஒரு நூறு ரூபாய் | இருநூறு ரூபாய் | ஐநூறு ரூபாய் |

மேற்கண்டவாறு தெரிவித்துள்ள விகிதத்தின்படி கட்டணம் அபராதம் விதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.436/2019/எச்1)

பொருள்– 24. குளித்தலை நகராட்சிப் பகுதியில் 24 வார்டுகளிலும் 24 இடங்களில் சமுதாய தானியங்கி குடிநீர் இயந்திரம் அமைக்க 07.01.2019.ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ‘‘அபெக்ஸ் எண்டர்பிரைசஸ், ஈரோடு’’ நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மட்டுமே தொழில்நுட்ப தகுதி உடையதாக உள்ளது. அதன் விலை விகித ஒப்பந்தப்புள்ளி 18.01.2019 திறப்பு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி

1). குளித்தலை நகராட்சியில் 20 லிட்டருக்கு ரூ.1.00 வீதம் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட வேண்டும்.

2). 20 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ரூ.7.00–க்கு தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரங்களின் அமைவிடங்களில் பொதுமக்களுக்கு விற்பனை செய்து கொள்ளலாம்.

என்கிற நிபந்தனைகளுக்கு ஒப்புதல் தெரிவித்துள்ள அபெக்ஸ் எண்டர்பிரைசஸ், ஈரோடு நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.3114/2018/இ1)

பொருள்– 25. இந்நகராட்சி ஆணையர், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அலுவலக வேலையின் காரணமாக வெளியூர் சென்றுவர 2018–2019.ஆம் ஆண்டுக்கு ரூ.5.00 லட்சம் உத்தேச செலவினம் மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண்.77, நாள்–28.03.2018.ல் அனுமதிக்கப்பட்டது. மேலும், திட்டப்பணி மற்றும் அலுவலக வேலையின் காரணமாக வெளியூர் சென்று வந்தமைக்கு 2018–2019 பயணங்களுக்கு அனுமதிக்கப்பட்ட தொகையில் கூடுதல் செலவினம் ரூ.40,000/– வரையில் பயணப்படி பட்டியல் தொகை பணியாளர்களுக்கு வழங்க வேண்டியுள்ளது. எனவே, ரூ.5,40,000/– திருத்திய பயணப்படி செலவினம் 2018–2019.ல் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1245/2018/அ1)

பொருள்– 26. குளித்தலை நகராட்சி அலுவலகத்தின் ஐந்து குளிர்சாதன இயந்திரங்கள் பழுதுகள் சரிசெய்து உதிரிபாகங்கள் மாற்றுதல் பணி மேற்கொள்ள, நாள்–01.03.2019.ல் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று, 04.03.2019 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி, 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | நகராட்சி அலுவலகத்தின் ஐந்து குளிர்சாதன இயந்திரங்கள் பழுதுகள் சரிசெய்து உதிரிபாகங்கள் மாற்றுதல் | ராகவேந்திரா ஏர்கன்டிசனிங், அண்ணாநகர், குளித்தலை. | ரூ.14,500/– |
| | | ஜி.பி.ஏர்கன்டிசனிங், திருச்சி–கரூர் மெயின்ரோடு, குளித்தலை. | ரூ.15,250/– |
| | | ஸ்ரீமாருதி ஏர்கன்டிசனிங், முசிறி | ரூ.15,450/– |

அலுவலக குறிப்பு– 1). மேற்கண்ட விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், குறைவாக விலைப்புள்ளி வழங்கியுள்ள ராகவேந்திரா ஏர்கன்டிசனிங், குளித்தலை நிறுவன விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.376/2019/இ1)

பொருள்– 27. குளித்தலை நகராட்சிப் பகுதியில் உள்ள வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளோருக்கு அரசு உதவி தொகை வழங்குவதற்காக பட்டியல்படியான பயனாளிகள் விபரம் சேகரிக்கப்பட்டது. மேலும், புதிய படிவங்களில் விபரம் சேகரிக்கப்பட்டது. அவற்றை கணினியில் பதிவேற்றம் செய்ய 01.03.2019 தேதியில் விலைப்புள்ளி பெறப்பட்டதன் விபரம் பின்வருமாறு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | கோல்டன் இன்போடெக், திருச்சி. | தயாவு ஸ்டடி சென்டர் அன்ட் ஐ.டி.கேர், மதுரை. | ஹெச்.ஐ.எல். டெக்னாலஜிஸ், மதுரை. |
|---|---|---|---|---|
| 1) | பழைய பி.பி.எல். விபர பதிவேற்றம் ஒன்றிற்கு | ரூ.3.00 | ரூ.4.00 | ரூ.3.50 |
| 2) | புதிய படிவம் சேகரிக்கப்பட்ட விபரம் பதிவேற்றம் ஒன்றிற்கு | ரூ.5.00 | ரூ.5.50 | ரூ.6.00 |

அலுவலக குறிப்பு– 1). வரிசை எண்.1.ல் ஆன கோல்டன் இன்போடெக், திருச்சி நிறுவனத்தாரின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

3). செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.273/2019/இ1)

பொருள்– 28. குளித்தலை நகராட்சி 2018–2019.ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் நிதியில் வண்டிப்பேட்டைதெரு, வைசியாள்தெரு, பிள்ளைதோப்புதெரு, வையாபுரிநகர், ஒட்டர்தெரு மற்றும் மலையப்பநகரில் ஆழ்குழாய் கிணறு அமைத்து மினிபவர் பம்ப் அமைத்து குடிநீர் வசதி செய்து கொடுத்தல் பணிக்கு ரூ.8.50 லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு, பணி முடிவுற்றுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்குள் ஆறு மின்மோட்டார்களுக்கு பராமரிப்பு பணிக்கு ஆறு மின்மோட்டார் பேனல் போர்டு மற்றும் கேபிள் வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2466/2018/இ1)

பொருள்– 29. குளித்தலை நகராட்சி 2018–2019.ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் நிதியில், தேவதானம், நாப்பாளையம், வைகநல்லூர் அக்ரஹாரம் பெருமாள்கோவில் அருகில் மற்றும் வடக்குமுத்துராஜாதெருவில் ஆழ்குழாய் கிணறு அமைத்து, மினிபவர் பம்ப் பொருத்தி, குடிநீர் வசதி செய்து கொடுத்தல் பணிக்கு ரூ.6.50 லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு பணிமுடிவுற்றுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்குள் பராமரிப்பு பணிக்கு 4 மின்மோட்டார் பேனல் போர்டு மற்றும் கேபிள் வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2466/2018/இ1)

பொருள்– 30. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் கழிவுநீர் வாகனம் தகுதிசான்றுபெற பழுது நீக்கம் செய்ய பணிமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் மற்றும் கழிவுநீர் தேங்கி சுகாதாரகேடு ஏற்படாவண்ணம்தடுப்பதற்கு தனியார் வாடகை வாகனம்மூலம் விலைப்புள்ளி கோர 12.11.2018.ல் ஆணையர் மற்றும் தனி அலுவ்லர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | நாள் ஒன்றுக்கு ரூபாய் |
|---|---|---|
| 1) | சக்தி செப்டிக் டேங்க் கிளினிங் ஒர்க்ஸ், குளித்தலை. | ரூ.4200/– |
| 2) | ஸ்ரீ வினாயகா செப்டிக் டேங்க் கிளினிங், குளித்தலை. | ரூ.4000/– |

மேற்கண்ட விலைப்புள்ளி ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இந்நகராட்சி பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் நாள்–12.11.2018.ல் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளிகோரி பணி மேற்கொண்டதையும் அதற்கான செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.4041/2018/எச்1)

பொருள்– 31. குளித்தலை நகராட்சிப் பகுதியில் ஐ.யு.டி.எம்.திட்டத்தின்கீழ் தார்சாலை அபிவிருத்தி பணிக்கு ரூ.200.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(MA2) அரசாணை எண்.(MS) 82, நாள்.23.08.2018.ல் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி 07.01.2019 அன்று ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று 30.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதன்படி 2 ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு சதவீதம் |
|---|---|---|---|
| 1) | தார்சாலை அபிவிருத்தி செய்தல், ஜெய்மகால் அவென்யு மெயின்ரோடு குறுக்குதெரு மற்றும் பாலாஜிநகர் குறுக்குதெரு வார்டு 14, அண்ணாநகர் ரோடு பூங்கோதை ஆஸ்பத்திரி அருகில், அண்ணாநகர் குறுக்குதெரு, கலப்புக்காலனி 4.வது மற்றும் 5.வது குறுக்குதெரு வார்டு 24, கடம்பர்கோவில் மேற்கு மடவாளதெரு மற்றும் வடக்கு மடவாளதெரு வார்டு 7, வைகைநல்லூர் அக்ரஹாரம் மெயின்ரோடு கரூர்–திருச்சி மெயின்ரோடு முதல் மணப்பாறை மெயின்ரோடு வரை வார்டு 5, லைப்ரரி மெயின்ரோடு வார்டு 23, எம்.பி.எஸ். அக்ரஹாரம் ரோடு மற்றும் டவுன்ஹால் தெரு ரோடு வார்டு 11, மற்றும் பரிசல்துறை ரோடு வார்டு 14, ஒரு சிப்பம். | திரு. கே.காளியப்பன், ஒப்பந்தாரர், மணப்பாறை | தொழில் நுட்ப தகுதியற்றதால் நிராகரிக்கப் பட்டது |
| | | திரு.எஸ்.பழனிச்சாமி, 231, 10.வது குறுக்கு தெரு, அண்ணாநகர், குளித்தலை. | 4.98 % அதிகம். |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கு செய்யப்பட்டதில், மதிப்பீட்டிற்கு கூடுதலாக இருந்த காரணத்தினால், ஒப்பந்தப்புள்ளியை குறைப்பு செய்து கொடுக்கும்படி (Negotiation), குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.எஸ்.பழனிச்சாமி, ஒப்பந்ததாரர் அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியை குறைத்து வழங்குமாறு 04.02.2019 அன்று இவ்வலுவலகத்தில் இருந்து கடிதம் அனுப்பப்பட்டது. அதன்படி, ஒப்பந்ததாரர் திரு.எஸ்.பழனிச்சாமி, இனம் எண்.1.04, 1.05, 1.15 மற்றும் 1.16 ஆகியவற்றில் விலை குறைப்பு செய்ய சம்மதித்து விலை குறைவு கடிதம் வழங்கினார். அதன்படி ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில், மதிப்பீட்டுக்கு 4.98 % கூடுதலாக இருந்தது. மேலும், கட்டுமான பொருட்கள், சாலை மற்றும் கட்டிட பணியாளர்கள் கூலி ஆகியவை விலையேற்றம் காரணமாக இனி குறைக்க இயலாது என இறுதிசெய்து பதில் கடிதம் வழங்கியுள்ளார். எனவே, மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). நகராட்சி நிர்வாகம், பொறியாளர் கையேடு தொகுதி–I, பத்தி 2.7.2 பக்கம் எண்.9.ல், பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு விகிதத்திற்கு 5% வரை கூடுதலாக முதல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பிலேயே வழங்கலாம் என தொவிக்கப்பட்டுள்ளது. எனவே, கட்டுமான பொருட்கள் விலையேற்றத்தினாலும், கட்டுமான தொழிலாளர் கூலியேற்றத்தினாலும், மதிப்பீட்டிற்கு 4.98% கூடுதலாக வழங்கியுள்ள திரு.எஸ்.பழனிச்சாமி, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2). அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண்.2251/2018/இ1)

பொருள்– 32. குளித்தலை நகராட்சி தனிநபர் கழிப்பறை கட்டும் பணிக்கு 2018–2019.ஆம் ஆண்டிற்ககன கணக்கெடுப்பில் 245 பயனாளிகளில், 180 பயனாளிகளுக்கு பணி முடிக்கப்பட்டது. மீதமுள்ள பணிகள் ஒப்பந்தகாரர்கள்மூலம் பணி நடைபெற்று வருகிறது. மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் அறிவுறுத்தலின்படி பணியினை விரைவாக முடிக்க பணிக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.8000/– மான்ய தொகையில் கழிப்பறை கட்டுவதில் சிரமமாக உள்ளது என பயனாளிகள் தெரிவிக்கின்றனர். 2017–2018.ல் CSR நிதியில் மீதம் உள்ள தொகை ரூ.1,65,719/– கணக்கில் இருப்பில் உள்ளது. மேற்கண்ட பணியினை விரைவாக முடிக்கவேண்டி உள்ளதால், தனிநபர் கழிப்பறை பணிக்கு தேவையான சிமெண்ட், கதவு, Claset ஆகியவற்றை CSR நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் CSR நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.440/2019/எச்1)

பொருள்– 33. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் TN-47-X-0031 என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற பழுதுநீக்கம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,24,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.482/2019/எச்1)

*******

**குளித்தலை நகராட்சி**

06.03.2019.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 30 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 31 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 3 | 3 | 32 | அனுமதி வழங்கப்பட்டது. |
| 4 | 4 | 33 | பதிவு செய்யப்பட்டது. |
| 5 | 5 | 34 | பதிவு செய்யப்பட்டது. |
| 6 | 6 | 35 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 36 | அனுமதிக்கப்பட்டது. |
| 8 | 8 | 37 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 38 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 39 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 11 | 11 | 40 | அலுவலக குறிப்பை ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 12 | 12 | 41 | அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 42 | அனுமதிக்கப்பட்டது. |
| 14 | 14 | 43 | அனுமதிக்கப்பட்டது. |
| 15 | 15 | 44 | அனுமதிக்கப்பட்டது. |
| 16 | 16 | 45 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 17 | 17 | 46 | அலுவலக குறிப்பை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 18 | 18 | 47 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 19 | 19 | 48 | அனுமதிக்கப்பட்டது. |
| 20 | 20 | 49 | அலுவலக குறிப்பை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 21 | 21 | 50 | அலுவலக குறிப்பை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 22 | 22 | 51 | அலுவலக குறிப்பை ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 23 | 23 | 52 | அனுமதிக்கப்பட்டது. |
| 24 | 24 | 53 | அலுவலக குறிப்பு ஏற்று அங்கீகரிக்கப்பட்டது. |
| 25 | 25 | 54 | அனுமதிக்கப்பட்டது. |
| 26 | 26 | 55 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 27 | 27 | 56 | அலுவலக குறிப்பு ஏற்று அங்கீகரிக்கப்பட்டது. |
| 28 | 28 | 57 | அனுமதிக்கப்பட்டது. |
| 29 | 29 | 58 | அனுமதிக்கப்பட்டது. |
| 30 | 30 | 59 | அலுவலகக் குறிப்பு ஏற்று அங்கீகரிக்கப்பட்டது. |
| 31 | 31 | 60 | அலுவலக குறிப்பு ஏற்று அங்கீகரிக்கப்பட்டது. |
| 32 | 32 | 61 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 33 | 33 | 62 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/– மு.கார்த்திகேயன்,
நகராட்சி பொறியாளர்,
ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர்(பொ),
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்(பொ),
குளித்தலை நகராட்சி.